**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Spl.Sessions Case No. | : | 11/2023 (Mother case SC.No. 17/2021) | |
| Deposition of witness for | : | Prosecution - Defense | **PW-24** |

| | | | |
|---|---|---|---|
| Name | : டாக்டர் திரு.வினோத்கண்ணன் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 21st day of January 2025.

**(எதிரி பிரேம்குமார் ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது கரூர், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 17.09.2020 அன்று இரவு 9.00 மணியளவில் பணியிலிருந்தபோது, மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்ட பிரேம்குமார், வயது 24, த/பெ. சண்முகம், வையாபுரி நகர், கரூர் என்பவரை அவரது நண்பர் அரவிந்த் என்பவர் மூலம் சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டார். பிரேம்குமார் என்பவர் பேசக்கூடிய நிலையில் இருந்தார். நான் அவரை விசாரித்தபோது, அவர் தன்னை அடையாளம் தெரிந்த இரண்டு நபர்களும், அடையாளம் தெரியாத நான்கு நபர்களும் இரும்பு கம்பியால் அன்றைய தினம் இரவு 8.40 மணிக்கு அண்ணாநகர், டீச்சர் காலனியின் அருகில் இருந்தபோது தாக்கியதாக ..........

கூறினார். அவரை நான் பரிசோதித்தபோது அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டன.

1. 3 x 1 x 1 cm அளவில் நெற்றியில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

2. இடது முன்கையில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

3. இடது தோள்பட்டையில் வீக்கம் காணப்பட்டது.

நான் அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து, உள்நோயாளியாக சேர்வதற்கு பரிந்துரைத்தேன். காயம்பட்ட நபர் உள்நோயாளியாக சிகிச்சையில் சேர விருப்பம் இல்லை என்றதால் புறநோயாளியாக சிகிச்சை அளித்தேன்.

மேற்சொன்ன நபரை சிகிச்சைக்கு சேர்த்தபோது நான் பதிவு செய்த விபத்து பதிவேடு நகல் அ.சா.ஆ.40.

காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என காயச்சான்றிதழ் வழங்கினேன். அந்த காயச்சான்றிதழ் அ.சா.ஆ.41.

இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் மூத்த வழக்கறிஞர் வேறு வழக்கில் ஆஜராகியுள்ளதால், குறுக்கு விசாரணைக்கு கால அவகாசம் கோரினார். குவிமுச பிரிவு 309 2 வது விலக்கு வாசகத்தின்படி வழக்கறிஞர் வேறு நீதிமன்றத்தில் ஆஜராவது, வழக்கை ஒத்தி வைப்பதற்கு போதிய காரணம் இல்லை என்பதால், சாட்சி குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Spl.Sessions Case No. | : | 11/2023 (Mother case SC.No. 17/2021) | |
| Deposition of witness for | : | Prosecution - | **PW-25** |
| | | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : டாக்டர் திரு.R.அன்பழகன் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 21st day of January 2025.

(எதிரி பிரேம்குமார் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் தற்போது கரூர், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், எலும்பு முறிவு மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 18.09.2020 அன்று காலை 11.30 மணியளவில் இதே மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவராக பணிபுரிந்து வந்தபோது, திரு.கிருஷ்ணமூர்த்தி, வயது 26, த/பெ. குணசேகரன் என்பவரை இறந்தநிலையில் அவரது மனைவி சுஷ்மிதா என்பவர் கொண்டு வந்தார். கிருஷ்ணமூர்த்தி என்பவரை நான் பரிசோதித்தபோது, அவர் இறந்துவிட்டார் என்று தெரியவந்ததால், அவரது பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்வதற்காக சவக்கிடங்கிற்கு அனுப்பி வைத்தேன். இது சம்மந்தமாக நான் பதிவு செய்த விபத்து பதிவேட்டு நகல் அ.சா.ஆ.42.

**<u>குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் மூத்த வழக்கறிஞர் வேறு வழக்கில் ஆஜராகியுள்ளதால், குறுக்கு விசாரணைக்கு கால அவகாசம் கோரினார். குவிமுச பிரிவு 309 2 வது விலக்கு வாசகத்தின்படி வழக்கறிஞர் வேறு நீதிமன்றத்தில் ஆஜராவது, வழக்கை ஒத்தி வைப்பதற்கு போதிய காரணம் இல்லை என்பதால், சாட்சி குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்